**செப்டம்பர் 12**

# *புனித கீ (Guy)(950-1012)*

இவரை "அந்தர்லெக்ட் நகரின் ஏழை" என்பார்கள். இவரது பெயரின் பொருள் "வழிகாட்டி" என்பதாகும். இவரது வாழ்வு மோட்சத்தின் வழியைக் காட்டுகிறது. அந்த வழி, கடவுள் நம்மை வைத்திருக்கும் நிலையில் திருப்தியுடன் இருப்பதும், கடவுளின் சித்தத்தை நிறைவேற்றி அந்த நிலையை அர்ச்சிப்பதுமாகும்.

இவருடைய பெற்றோர் மிக ஏழைகளாய் இருந்தமையால் இவரைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப முடியவில்லை. என்றாலும் வீடு என்னும் பள்ளிக்கூடத்தில் இவருக்கு சிறந்த பயிற்சியளிக்கப்பட்டது. "நாம் கடவுளுக்குப் பயப்படுவோமானால் அது சிறந்த செல்வம்" என்று தொபியாஸ் சொன்னது இவர்களுக்குப் பொருந்தும், இவர் தமது ஏழ்மை நிலையை நினைத்து மகிழ்ந்தார். நம் நேச ஆண்டவரும் ஏழை, அவருக்கு தலை சாய்க்க இடமில்லை. தனக்கு வந்த வேதனை, பசி, பட்டினி, தாழ்மைகள் இவற்றைப் பற்றி புனித கீ மகிழ்ந்தார். இவர் தம் அயலாரை நேசித்தார். செபத்தை நேசித்தார். ஒரு நாள் கோவிலில் செபித்துக் கொண்டிருக்கும் போது ஒரு குரு இவரை அழைத்து இவருடன் சிறிது நேரம் பேசிய பின் அவரை அந்தக் கோவிலில் வேலைக்கு அமர்த்திக் கொண்டார். கடவுளுக்கும் பரிசுத்த பொருட்களுக்கும் மிக சமீபத்தில் இருப்பது இவருக்கு மிகுந்த மகிழ்ச்சியளித்தது. கடவுளுக்காக தரித்திரத்தில் அமைதியுடன் வாழ்ந்தார். கோவிலைப் பெருக்க வேண்டும். பீடங்களை அலங்கரிக்க வேண்டும். திரு உடைகளை மடித்து, திருப்பணி பொருட்களைப் பத்திரமாக வைத்திருக்க வேண்டும். கோவிலில் மணியடிப்பதும் இவரது வேலை. "இது கடவுளது வேலை; பீடத்தின் பக்கமாய் வருகிறவர்கள் பயபக்தியுடன் வர வேுண்டும்" என்று கூறுவார். எல்லோரும் இவரைப் புகழ்ந்து பாராட்டினார்கள். இவரது கீர்த்தி எங்கும் பரவியது. எனவே அந்த இடத்தை விட்டு வெளியேற இவர் தீர்மானித்து உரோமைக்கும் பாலஸ்தீனா புண்ணிய பூமிக்கும் திரு யாத்திரையாகச் சென்று திருத்தலங்கள் பலவற்றைச் சந்தித்தார். லக்கன் என்னும் நகரத்திற்கு திரும்பி வந்தார்.

**சிந்தனை:**

பிறர் நம்மைப் புகழும் பொழுது நாம் அஞ்ச வேண்டும். ஏனெனில் மனிதரது புகழ்மொழிகளை எதிர்ப்பார்க்கிறவன் கடவுளது புகழ்மொழிகளைக் கேளாது போகலாம்.

**செபம்:**

ஆண்டவரே, மனிதரது புகழ்மொழிகள் நிலையற்றவை என்பதை நாங்கள் உணரச் செய்யும்.